# In the Court of the Additional District Munsif, Padmanabhapuram.

O.S.No..82/2024 தேதி- 10.08.2026

(D.W.1) . கலாபதி

**குறுக்கு விசாரணை**

எனக்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை ஏதாவது வந்ததா என்றால் அழைப்பாணை ஏதும் வரவில்லை. பின்பு எவ்வாறு நீதிமன்றத்திற்கு சாட்சி சொல்ல வந்தேன் என்றால் எனது வழக்கறிஞர் சொல்லிசாட்சி அளிக்க வந்தேன். எனது கணவரான பிரதிவாதியின் நானும் ஒரே வீட்டில்தான் தாமசித்து வருகிறோம். ஆகையால் இந்த வழக்கிலுள்ள விபரம் அனைத்தும் எனக்கு தெரியும். இந்த வழக்கு எதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் வாதிகளுக்கு 6 சென்ட் இடம் பாத்தியப்பட்டது என்று கூறி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். வாதியினுடைய பழைய சர்வே எண்ணோ புதிய சர்வே எண்ணோ எனக்கு தெரியாது. என்னுடைய சர்வே எண் 205 ஆகும். முன்னாள் இந்த சொத்துக்கள் 30 சென்ட் செல்லக்கண் நாடார் என்பவருக்கு உரிமைப்பட்டது என்றால் சரிதான்.

எனது மாமனார் இறந்த பின்பு எனது மாமியும் அவரது பிள்ளைகளான தங்கப்பன், பாலகிருஷ்ணன், முருகன் ஆகியோருக்காக வேண்டி அவர்களது தாயார் தெரசம்மாள் மேஜர் பிள்ளைகள் செல்வம், ராமசந்திரன், முத்துசாமி, முத்துநாயகம் மகன் பொன்னப்பன் ஆகியோர் சேர்ந்து ரகியாபீவி என்பவருக்கு 12 சென்ட் சொத்தை எழுதிக்கொடுத்தார்கள் என்றால் சரிதான். மேற்படி 12 சென்ட் சொத்தை வா.சா.ஆ. 1 ஆவணம்மூலம் தங்கப்பன் மற்றும் அவரது அம்மா தெரசம்மாள் ஆகியோர் ரகீயாபீவியிமிருந்து விலைக்கு வாங்கினார்கள் என்றால் 6 சென்ட் தெரசம்மாளும் 6 சென்ட் தங்கப்பனும் விலைக்கு வாங்கினார்கள் அதில் தெரசம்மாளின் பெயரிலுள்ள 3 3/4 சென்ட் சொத்தை தெரசம்மாளின் வாரிசுகளுடன் சேர்ந்து வா.சா.ஆ. 2 ஆவணத்தின்படி எனது கணவருக்கு செட்டில்மெண்டாக எழுதிக்கொடுத்தார்கள். எனது மாமிக்கு என்ன வேலை என்றால் கடவம் முடையும் வேலை.

தெரசம்மாளுக்கு எந்த வேலையும் கிடையாது தங்கப்பன் அவருடைய தாய் மூதாதையர் என்பதால் அவருடைய பெயரில் தனது பணத்தை கொண்டு 12 சென்ட் சொத்தை வாங்கினார் என்றால் பிரதிவாதி வாங்கிய சொத்திற்கான பணத்தை

தங்கப்பனிடம் கொடுத்துவிட்டோம். மேற்கு பக்கம் 6 சென்ட் தெரசம்மாளுக்கும் கிழக்கு பக்கம் 6 சென்ட் தங்கப்பனுக்கும் அவகாசப்பட்டது என்றால் சரிதான். தெரசம்மாள் இறந்தபின்பு அவரது வாரிசுகளான 11 பேரில் 10 பேர் சேர்ந்து எனது கணவருக்கு வா.சா-ஆ.2 ஆவணத்தின்படி செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்தார்கள் என்றால் சரிதான். எனது கணவருக்கு உரிமைப்பட்ட 3 3/4 சென்ட் சொத்தை தொட்டு கிழக்கு பக்கம் தங்கப்பனின் 6 சென்ட் என்று சொல்லித்தான் எனது கணவருக்கு சொத்து வா.சா.ஆ- 2 ன்மூலம் கிடைத்தது என்றால் சரிதான். தங்கப்பனுக்கு 2 பெண் பிள்ளைகள் அவர்கள் இருவரும்தான் இந்த வழக்கின் வாதிகள் என்றால் சரிதான்.

தங்கப்பன் வா.சா.ஆ. 1 ஆவணத்தின்படி அவரது மகள்கள் இருவருக்கும் செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளார். அதன் பெயரில் வாதிகள் கைவசம் வைத்து அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் இடத்தை பார்வையிட வரும்போது நீதிமன்ற ஆணையரிடம் எங்களது சார்பில் மெமோ ஏதாவது கொடுக்கப்பட்டதா என்றால் மெமோ எதுவும் கொடுக்கவில்லை. எங்களுக்கு உரிமைப்பட்ட 3 3/4 சென்ட் சொத்துதனியாக கிடப்பில் இருப்பதால்தான் நீதிமன்ற ஆணையரிடம் குறிப்பாணை கொடுத்து அளக்கவில்லை என்றால் சரிதான் அதில்தான் வாதிகள் எல்கை நிர்ணயம் செய்ய சொல்லி கேட்கிறார்கள். அசல் வழக்கு 2/2019 என்ற வழக்கு தாக்கல் செய்திருப்பது பற்றிய விபரம் தெரியுமா என்றால் தெரியும். அந்த வழக்கு என்னவானது என்று எனக்கு தெரியாது. வழக்கு நிலுவையில் இருக்கும்போது 3 3/4 சென்ட் சொத்தை விற்பனை செய்துவிட்டோம் என்றால் சரிதான் அதை திருமால் என்பவருக்கு விலையாக கொடுத்துவிட்டோம். நாங்கள் விலைக்கு கொடுத்த ஆவணத்தில் காலிமனை என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

நான் எனது கணவருக்கு வேண்டி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதிகளுக்கு அவர்கள் கேட்டிருக்கும் எல்லா பரிகாரமும் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

## மறு விசாரணை

எனது கணவருக்கு உரிமைப்பட்ட இடத்தில் எத்தனை பலா மரங்கள் உள்ளது என்றால் 3 பலா மரங்கள் உள்ளது. பலா மரத்தின் வயது என்ன இருக்கும் என்றால்

25 வயதிருக்கும். அதில் 1 கூழன், மற்ற இரண்டும் வருக்கை வகை ஆகும். 3 பலா மரத்தில் இருந்து கிடைக்கும் பழத்தின் பலனை நான் எடுத்துதான் வாதிகளுக்கு கொடுப்பது வழக்கம்.